சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No.**153 / 2016**

வாதி / பிரதிவாதி **பி.வா.சா.7வ**து சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி. T.திலகவதி அவர்களால் 44/1969 பிரிவின்படி **10.03.2025**ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜேஷ் | கிராமம் | : |
| த/பெ | : | வட்டம் | : |
| மதம் | : | தொழில் | : |
| ஜாதி | : | வயது | : |

முதல் விசாரணை

நான் திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் உள்ள பஞ்சாப் நேஷனல் வங்கியில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 07.05.2008 தேதியிட்ட (ஆவண எண்.66/2008) வழக்கின் உயில் சாசனத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். மேற்படி உயில் சாசனத்தின் சான்று நகல் பி.வா.சா.ஆ.32. மேற்படி பி.வா.சா.ஆ.32 (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது).

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

மேற்படி உயில் ஆவணத்தை எங்களது வங்கியில் எதற்காக கொடுக்கப்பட்டது என்றால் அடமானம் வைத்து கடன் பெற்றதற்காக கொடுக்கப்பட்டது. மேற்படி உயில் ஆவணத்தை யார் எங்களது வங்கியில் கொடுத்து கடன் பெற்றார் என்றால் கோபால் என்பவர் கடன் பெற்றார். பொதுவாக கடனாளிகளுக்கு கடன் கொடுக்கும் பட்சத்தில் வழக்கின் உரிமை மூலம் மற்றும் உடமை மூலத்தை சரிபார்த்து தான் கடன் வழங்குவோம் என்றால் சரிதான். மேற்படி உயிலில் கோபால் வில்லங்கபடுத்தக்கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பின்னர் எதன் அடிப்படையில் நான் கோபாலுக்கு கடன் கொடுத்தேன் என்றால் எங்களது வழக்கறிஞர் கொடுத்த பரிந்துரையின் பேரில் கடன் வழங்கப்பட்டது. பி.வா.சா.ஆ.32 ஆவணமானது பிறப்பித்துக்கொடுக்க கோபாலுக்கு உரிமையில்லை என்ற நிலையில் கடன் கொடுத்ததாக சொல்வது யாவும் இந்த வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. உண்மை தெரிந்துவிடும் என்பதால் தான் மேற்படி கடன் விண்ணப்பத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்களது வங்கி ஆவணங்களை சரிவர பரிசீலிக்காமல் கடன் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

ஐந்தாவது பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நீதிமன்ற அழைப்பாணையில் உயிலை தவிர எதன் அடிப்படையில் கடன் வழங்கப்பட்டது, (Legal opinon, Sanction Order) எதுவும் கேட்கப்பட்டதா என்றால் இல்லை. பொதுவாக உயிலின் அடிப்படையில் கடன் வழங்கப்படாது என்றால் வாரிசுதாரர்களை கண்டறிந்து , Legal opinon, வாங்கி கடன் வழங்குவோம். நாங்கள் எந்த வகையான கடன் வழங்கினோம் என்றால் வீட்டுக்கடன் கொடுத்தோம். மேற்படி உயிலில் பக்கம் 2ல் 5வது பாராவில் 8வது வரியில் கோபால் என்பவர் கார்டியனாக இருக்குமட்டுமே அனுமதி கொடுக்கப்பட்டு உயில் ஆவணமானது ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.32 உயிலில் கண்டுள்ள கடனானது கோபால் பெயரில் தான் கொடுக்கப்பட்ட வீட்டுக்கடன் என்றால் அவருடைய மகன்களும் சேர்ந்து தான் கடன் வாங்கியுள்ளார்கள். மேற்படி மற்ற மகன்களை கேரன்டராகத்தான் காண்பித்துள்ளோம் என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். மேற்படி

பி.வா.சா.ஆ.32 ஆவணத்தின் படி யாருக்கு எந்த தேதியில் எந்த மாதிரியான கடன் கொடுக்கப்பட்டது, எவ்வளவு கொடுக்கப்பட்டது, எந்த ஆவணங்களை பார்வையிட்டு (Legal opinon,) கடன் கொடுக்கப்பட்டது என்கின்ற சங்கதி எனக்கு நேரடியாக தெரியாது ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். அழைப்பாணை வந்ததற்கு பின்னிட்டும் நான் மேற்படி ஆவணங்களை பார்க்கவில்லை.

மறுவிசாரணை :இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.